## 2.16 சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. ஒரு பூனைக்கு 4 கால்கள் உள்ளன எனில், 5 பூனைகளுக்கு எத்தனை கால்கள் இருக்கும்?

   அ) 15 ஆ) 19 இ) 20 ஈ) 21

2. ஒரு புறாவிற்கு 2 கால்கள் உள்ளன எனில், 8 புறாக்களுக்கு எத்தனை கால்கள் இருக்கும்?

   அ) 16 ஆ) 17 இ) 15 ஈ) 14

3. ஒரு கூடையில் 5 காய்கள் உள்ளன எனில், 6 கூடைகளில் எத்தனை காய்கள் இருக்கும்?

   அ) 29 ஆ) 30 இ) 36 ஈ) 31

## 2.17 சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. ஒரு பெட்டியில் 6 முட்டைகள் உள்ளன எனில், 8 பெட்டிகளில் எத்தனை முட்டைகள் இருக்கும்?

   அ) 47 ஆ) 48 இ) 42 ஈ) 54

2. ஒரு பேருந்தில் 6 சக்கரங்கள் உள்ளன எனில், 10 பேருந்துகளில் எத்தனை சக்கரங்கள் இருக்கும்?

   அ) 42 ஆ) 48 இ) 60 ஈ) 54

3. ஒரு வாரத்தில் 7 நாள்கள் உள்ளன எனில், 9 வாரங்களில் எத்தனை நாள்கள் இருக்கும்?

   அ) 42 ஆ) 49 இ) 56 ஈ) 63

## 2.18 சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. ஒரு பெட்டியில் 9 பால் பாட்டில்கள் உள்ளன எனில், 9 பெட்டிகளில் எத்தனை பால் பாட்டில்கள் இருக்கும்?

   அ) 54 ஆ) 63 இ) 72 ஈ) 81

2. ஓர் அழிப்பானின் விலை ₹12 எனில், 7 அழிப்பான்களின் விலை என்ன?

   அ) ₹74 ஆ) ₹84 இ) ₹94 ஈ) ₹72

3. ஒரு சிலந்திக்கு 8 கால்கள் உள்ளன எனில், 9 சிலந்திகளுக்கு எத்தனை கால்கள் இருக்கும்?

   அ) 64 ஆ) 73 இ) 72 ஈ) 62

LIVEWORKSHEETS